

ATS

24 மணி நேர
தொலைத்தொடர்பு
சேவைகளுக்கு

நம்பிக்கையான இடம்:

மிதுஷா
புதிய பஸ் நிலைய
கட்டடம்,
வவுனியா.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

முகவர் தபால்
தொலைத்தொடர்புகளுக்கு
நம்பிக்கையான

ஒரே இடம்:

மிதுஷா
புகையிரத நிலைய வீதி,
வவுனியா.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 18 திங்கட்கிழமை (31 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 65

தென்னிந்தியாவின் ஸ்திரத்தைக் குலைக்க
புலிகளை பாகிஸ்தான் பயன்படுத்துகிறது

அமெ., பிரிட்டன் எச்சரிக்கை; இந்திய வானொலி அறிவிப்பு

புதுடில்லி, ஜனவரி .31

விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி தென்னிந்தியாவில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று பாகிஸ்தானை அமெரிக்காவும் பிரிட்டனும் எச்சரித்து இருக்கின்றன,

கொழும்பில் உள்ள அதிகாரபூர்வ வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி யு. என். ஐ. செய்திஸ்தாபனம் இந்தச் செய்தியை வெளியிட்டிருப்பதாக இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது.

விடுதலைப் புலிகளுடன் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து பாகிஸ்தானை அமெரிக்காவும் பிரிட்டனும் எச்சரித்துள்ளன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க உதவியுடன் வி. ஐ. பி. பாதுகாப்புப் பிரிவு

முக்கியபிரமுகர்களின் பாதுகாப்புக்காக — அமெரிக்க உதவியுடன் — ''வி. ஐ. பி பாதுகாப்பு பிரிவு'' ஒன்றை அரசாங்கம் அமைத்து வருவதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து இப்பாதுகாப்புப் பிரிவை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அமெரிக்க புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் இருவர் தற்போது கொழும்பில் வந்து தங்கியிருப்பதாகவும் —

பூர்வாங்க வேலைகளை அவர்கள் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்படும் பாதுகாப்புப் பிரிவினர், ஆரம்பத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக அமர்த்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

உணவுப் பொருள்களுடன் "கோமாரி" வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜன. 31

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் ''கோமாரி'' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

700 மெற்றிக் தொன் அரிசி, 100 மெற்றிக் தொன் சீனி, 203 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் தீப்பெட்டி சோயாமீற், வெந்தயம், மல்லி உள்ளி தேயிலை, புளி என்பனவும் — யாழ் ஆஸ்பத்திரி, பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுக்கான பொருள்களும் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் செயலக அதிகாரிகள் இருவரும் மற்றும் பயணி ஒருவரும் இந்தக் கப்பலில் யாழ் வந்து சேர்ந்தனர். (உ-5-173)

தாக்குதலுக்கு ஆயத்தமாக கிளிநொச்சியில் 500 புலிகள்

கொழும்பு, ஜன. 31

வடபகுதி இராணுவ முகாம் மீது பாரிய தாக்குதலை மேற்கொள்ளும் நோக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு உறுப்பினர்கள் கிளிநொச்சியில் திரண்டுள்ளனர். அப்பகுயில் அவர்கள் பயற்சி பெற்றுவருவதாக இராணுவத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

— இவ்வாறு சிங்கள வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேற்படி பயிற்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டது.

பயங்கரவாத வழக்கில் தமிழ் இளைஞர் விடுதலை

முன்னர் கடல் புறாவில் கைதானவர்

கொழும்பு, ஜன. 31

1989 - 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொழும்பில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த ஜோன் பொஸ்கோ இருதயநாதன் (செல்வா) என்ற தமிழர் இளைஞரை விடுவிக்கும்படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வெஸ்லி அபேசேகரா கடந்த வாரம் உத்தரவிட்டார்.

1987 இல் பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளின் ''கடல்புறா'' கப்பலில் வைத்து குமரப்பா புலேந்திரன் ஆகிய தளபதிகளுடன் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 17 பேரில் இவரும் ஒருவர் என்றும் —

கப்பலில் இருந்த 17 பேரில் பன்னிருவர் சயனைட் உட்கொண்டு மரணிக்க, இருதயநாதன் உட்பட ஐவர் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு – புலிகள் பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் —

பின்னர் மீண்டும் யுத்தம் ஆரம்பமானதைத்தொடர்ந்து — 1990 ஆண்டில் — கொழும்பில் வைத்து தமிழ் அமைப்பு ஒன்றினால் கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

ப.நோ.கூ.ச, மூலம் இனி இலவச சீருடை விநியோகம்

கொழும்பு, ஜன. 31

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகளை இவ்வருடம் முதல் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வருடம் இலவச சீருடைத் துணிகள் மாணவர்களுக்கு அவர்களது பாடசாலைகள் ஊடாகவே விநியோகிக்கப்பட்டு வந்தன.

இதனால் வீண்பணச்செலவு ஏற்பட்டதாகவும் —

சீருடை விநியோகத்தில் சிர்கேடுகள் இடம் பெற்றதாகவும் —

இதனைடுத்தே புதியதிட்டம் செயற்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி —

மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகளுக்குரிய கார்ட்டுகள் பாடசாலைகளில் வைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் —

மாணவர்கள் அந்த கார்ட்டுகளை அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அல்லது சதுசல கடைகளில் காட்டி துணியைப் பெற்றுக் கொள்ள முடியும். (உ-9)

தென் பகுதியில் மீண்டும் ஜே. வி. பி. அச்சுறுத்தல்!

அரசுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

கடந்த மாதம் தெற்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் யுத்த உபகரணங்கள் ஜே வி பி யினரின் அச்சுறுத்தல் மீண்டும் உருவாகியிருப்பதை உணர்த்தியுள்ளதாக அரசாங்க மேல் மட்டத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

37 ரிவோல்வர்கள், இரண்டு துப்பாக்கிகள், ஒரு ரி.56 துப்பாக்கி மற்றும் பெருந்தொகையான வெடி மருந்துகள் என்பன இரத்தினபுரி, மாத்தளை, லுணுகம்வெஹர ஆகிய இடங்களில் அண்மையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

குட்டி ஆயுதக் கிடங்கு ஒன்று மோதரைப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி இரவு பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

23 குண்டுகள் கைப்பற்றப் பட்டன. அவற்றில் குறைந்தது 12 வெளிநாட்டுத் தயாரிப்பு கிரனேட்டுக்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எட்டு சந்தேக நபர்களை பொலீஸார் கைது செய்தனர். வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான

நாடாளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கை மார்ச்சில் முடிவு

கொழும்பு, ஜன 31

அரசமைப்பு சீர்திருத்தத்தின் கீழ் தற்போதைய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றப்பட வேண்டுமா என்பது குறித்தும் —

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை தொடர்பாகவும் —

ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்ட இரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களும் தமது நடவடிக்கைகளை மார்ச் மாதத்துடன் முடித்துக் கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளர் சிறுபான்மையினரின் வாக்குகளிலேயே பெருமளவு தங்கியிருக்க வேண்டிய நிலை உள்ளதால் —

ஜனாதிபதி ஆட்சி முறையே (சில மாற்றங்களுடன்) தொடர வேண்டும் என இ. தொ. கா. உட்பட பல தமிழ் முஸ்லிம் கட்சிகள் தெரிவுக் குழுவிடம் ஆலோசனை தெரிவித்துள்ளனவாம்.

ஆனால் நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடிய பிரதமர் ஆட்சிமுறை('வெஸ்ட் மினிஸ்டர் பாணியில்)' கொண்டு வரப்பட வேண்டும் என ஸ்ரீ ல சு கட்சி தனது யோசனையில் குறிப்பிட்டுள்ளது.

வடக்கையும், கிழக்கில்

(4ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் வெற்றிக்காக டி.பி. இனவாதம் பேசுகின்றார்!

பி.பி.ஸி. விமரிசனம்

லண்டன், ஜன. 31

டிசம்பரில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலும், அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டுவதற்காக —

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இனவாதம் பேசத் தொடங்கியிருப்பதாக பி. பி. ஸி தனது விமர்சனத்தில் தெரிவித்திருக்கிறது.

1950களில் தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று கோரியது முதல்—

இந்திய அமைதிப் படையை வெளியேற்றுமாறு கோரியது வரை —

தேர்தல் காலங்களில் வெற்றியீட்டுவதற்காக இனவாதமே எழுப்பப்பட்டு வந்திருக்கிறது.

இலங்கை வாக்காளர்களில் நான்கில் மூன்று பகுதியினர் சிங்களவர் என்பதால் அவர்களின் ஆதரவு மட்டும் வெற்றியீட்டுவதற்குப்போதும் என டி. பி. நினைக்கிறார்.

1983 இனக்கலவரத்தை அடுத்து இனவாதப் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. இந்த நிலையை சாதகமாகவும் உரிய முறையிலும் பயன்படுத்தி தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் ஆகியோரின் ஆதரவைப் பெறுவதில் ஜனாபதி பிரேமதாஸா வெற்றியீட்டினார்.

ஆனால் இந்த உறவை டி.பி. விஜேதுங்க உதாசீனம் செய்து விட்டார்.

டி, பி. விஜேதுங்க கண்டிச் சிங்களவர் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மத்திய தோட்டப் பகுதிக்குள் நுழைந்த இந்தியத் தமிழர்களினால் தங்களின் நிலை பாதிக்கப்பட்டதாகக் கருதும் கண்டி சிங்கள வர்க்கத்தைச் சேர்ந்தவர் டி பி. விஜேதுங்க.

[4 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி

அப்ப...... திரும்பவும் டயர் [illegible] வினம்......!

தமிழர் கைது

அண்மையில் பொலன்னறுவை மாவட்டம் மன்னம்பிட்டிக் கிராமத்தில் அதிகாலைவேளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பொலீஸார் 40 பெண்கள் உட்பட 215 தமிழர்களைக் கைது செய்தனர்.

தைப்பொங்கல் தினத்தன்று சிங்களக் கிராமவாசி ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்தே தேடுதல் நடத்தப்பட்டது.

அமைச்சரின் காரிலிருந்து தொலைபேசி மாயம்!

அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ காரிலிருந்த செலுலர் தொலைபேசிக் கருவி களவாடப்பட்டிருப்பதாகப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாயன்று மிரிஹானையில் பௌத்த சாசன அமைச்சர் லால் தர்மப்பிரிய கமகேயின் இல்லத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த காரிலிருந்த தொலைபேசியே திருட்டுப் போயிருக்கிறது.

காருக்குப் பாதுகாப்பாக நின்ற பாதுகாப்பு அதிகாரிகள் தற்போது பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

மேல் நீதிமன்றப் பணத்தை கையாடிய பெண் ஊழியர்

கொழும்பு ஜன. 31

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியின் கையொப்பங்களை ஒத்த போலிக்கையொப்பங்களை பத்திரங்களில் போட்டு, சுமார் இரண்டு கோடி ரூபா வரையான பணத்தை அந்த நீதிமன்றத்தில் பணிபுரியும் இரு பெண் ஊழியர்கள் கையாடியிருப்பதாகப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்திற்குச் சொந்தமான பணத்தில் சுமார் 75 லட்சம் ரூபா, சட்டத்தரணி ஒருவரின் பெயரில் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பொலீஸார் விசாரணையின் போது கண்டு பிடித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தினால் அறவிடப்படும் பணம் பல சந்தர்ப்பங்களில் வங்கிகளில் வைப்பிலிடப்படாமல் கையாடப்பட்டிருப்பதும் இரகசியப் பொலீஸாரின் விசாரணையின் போது தெரியவந்துள்ளதாம். (உ-3)

கொடுப்பனவு நிலுவைகள் ஓய்வூதியருக்கு மார்ச்சில்!

வடமராட்சி, ஜன. 31

1985 ஆம் ஆண்டின் பின் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் (அலவன்ஸ்) யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான விவரங்களை யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. எஸ். சிவபாலனும், ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. கா. வீரசிங்கமும் கொழும்பில் இருந்து இங்கு எடுத்து வந்துள்ளனர்.

கொடுப்பனவுகள் பற்றிய விவரங்களை செயலக ஓய்வூதியக் கிளையால் விரைவில் வெளியிடப்படும்.

டிசெம்பர், ஜனவரி மாதங்களுக்கான கட்டுநிதியில் இருந்து மேற்படி கொடுப்பனவை ஓய்வூதியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (உ-5-173)

சூரியகந்த புதைகுழி விடயம்; மீண்டும் விசாரணை நாளை

சூரியகந்த புதைகுழி தொடர்பான மாஜிஸ்திரேட் நீதிமன்ற விசாரணை மீண்டும் நாளை காலை இரத்தினபுரி நீதிவான் பீ. ரணசிங்க முன்னிலையில் ஆரம்பமாகவிருக்கிறது.

கடந்த 24 ஆம் திகதி கடைசியாக நீதிமன்ற விசாரணை நடைபெற்ற போது, புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கி, விசாரணைகளைத் தொடருமாறு —

காணாமற்போன பொது மக்களின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்றத்திடம் கோரியிருந்தார். (உ)

காணாமற் போனவர்களுக்கு

ஒருவருட காலத்தின் பின் மரணப்பதிவுச் சான்றிதழ்

கொழும்பு, ஜன. 31

காணாமற் போனவர்களுக்கும் இறந்துவிட்டதாக நம்பப்படுபவர்களுக்கும் மரணப் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கு இடமளிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

காணாமற் போயுள்ள பலர் இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றபோதிலும், தற்போதைய சட்டத்தின்படி இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவர்களின் குடும்பத்தினர் கஷ்டப் படுகின்றனர்

மரணச் சான்றிதழ் இல்லாமல் ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு ஓய்வூதியம் போன்றவற்றையும் அவர்களி

(4 ஆம் பக்கம் பார்க்க)

டெஸ்ட் கிரிக்கெட்டில் கபில்தேவ புதிய சாதனை

பெங்களூர், ஜன. 31

இந்திய கிரிக்கெட் வீரரான நிகன்ஜ் கபில்தேவ் டெஸ்ட் கிரிக்கெட் சரித்திரத்தில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனையை சமப்படுத்தினார்.

நேற்று பெங்களூரில் இந்திய — இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை வீரரான டொன் அருணசிறியின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் —

நியூஸிலாந்து வீரரான சேர் றிச்சர்ட் ஹட்லி நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அல்சேஷன் நாய்கள் வளர்க்க உகந்த கூடு, பல இன கோழிகள் வளர்க்க உகந்த கூடு விற்பனைக்குண்டு. இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி (இந்துக் கல்லூரிக்கு பின்னால்)

(29174)

நல்ல இன ஆண் அல்சேஷன் 5 வயது, வான்கோழிச் சேவல்கள் 6 மாதம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயி மெடிக்கல்ஸ், திருநெல்வேலி.

[29154]

வான் விற்பனைக்கு

லைன் டிலிவரி வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''மில்க்வைற்''

(சி-7154)

காணி விற்பனைக்கு

அரைப் (½) பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை றோட், கட்டைப்பிராய். மாவீரர் வீதியில் அமைந்துள்ளது. தொடர்பு கொள்ளவும்: மாதீதையா. சைக்கிள் கடை, மாவீரர் வீதி, கட்டைப்பிராய். (29186)

தேவை

தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண்டு 9, 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம், சமூகக்கல்வி, வர்த்தகம் போன்ற பாடங்களை கற்பிக்கக் கூடிய ஆற்றல் மிக்கவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். (மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.) 927, மே/பா, உதயன்.

(சி-7211)

வசந்தபுரம் மஹோற்சவம்

ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் **2 - 2 - 94** புதன்கிழமை ஆரம்பமாகி **12 - 2 - 94** வரை நடைபெறும்.

அபிஷேகம் — தினமும் காலை 8 மணி
பூஜை — தினமும் காலை 10 மணி
சொற்பொழிவு — தினமும் முற்பகல் 11.30 மணி
சுவாமி வீதியுலா — தினமும் நண்பகல் 12 மணி
அன்னதானம் — தினமும் பிற்பகல் 1 மணி

★ **11-2-94** தேர்த்திருவிழா அன்று அம்பாள் அழகிய ரதத்தில் பவனிவருவாள்.

— தேவஸ்தானம்.

(29177)

BECON

யாழ்ப்பாணம்

A/L 94 DAY CLASS

மீட்டல் வகுப்பு

பொருளியல் — வரதராஜன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — பசில்
அளவையியல் — மனோகரன்
இந்து நாகரிகம் — பாலா
தமிழ் — மீரா
கிறிஸ்தவம் — நிரஞ்சன்
அரசியல் — டஞ்சாட்சரம்

ஆரம்பம்: 01 - 02 - 1994

காலை 8-00 மணி

★ **05 - 02 - 1994** இற்கு பின்பு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

[சி-7209]

---

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
27 – 01 – 1930

மறைவு:
31 – 01 – 1990

அமரர் க. பரராஜசிங்கம்

(இளைப்பாறிய புகையிரத பாதுகாவலர்)

என்றும் எம் நினைவில் சுடர் விடும் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ரயில்றோட்,
கொக்குவில்.

(29183)

அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 4-2-94 காலை 9 00 மணிக்கு பொது நிர்வாகசபைக் கூட்டமும், காலை 10.00 மணிக்கு பொதுச்சபைக் கூட்டமும் எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும் பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கவிருப்பதால் தயவு செய்து சகல நிர்வாக சபை உறுப்பினர்களையும், நிர்வாகிகளையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[சி/7157]

தலைநகரில் தங்குமிடவசதி

NACTAR INN

நெக்டா இன்

கொழும்பு - 12 இல்
தங்குமிட வசதி

- நாள் மாத வாடகை
- சமையல் வசதிகள்
- வெளிநாட்டு உள்நாட்டுத் தொலைபேசி வசதி
- பிரயாண வாகன வசதி
- நிறைந்த சுவாத்தியம்
- குறைந்த செலவில் நிறைந்த சேவை

தபால் நிலையம், வைத்திய வசதிகளும் அமைந்த சுற்றாடல்.

115, ஹல்ஸ்டிரப் வீதி,
கொழும்பு - 12

115, HULTSDORF STREET,
COLOMBO - 12
Telephone: 332536

(29167)

கிறீஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம்

அடக்க ஆராதனை

எமது சபையின் உதவிப் போதகர்
S. ஜோசப் பத்திநாதனின் அன்பு மாமியார்

நீயோகு பேர்ணபேத்

29 01-94 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார். அடக்க ஆராதனை இன்று **31-01-94** (திங்கள்) மாலை 3-30 மணிக்கு எபனேசர் ஜெபநிலையம் வட்டுக்கோட்டையில் நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எபனேசர் சபை போதகர்,
ஊழியர், விசுவாசிகள்.

[29182]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
01 – 04 – 1905

விண்ணில்:
01 – 01 – 1994

●

1 01 – 1994

கணபதிப்பிள்ளை கயிலாயபிள்ளை

அன்பு சொரிந்து ஆசையுடன் வளர்த்து நல்வழி காட்டி எம்மை ஆளாக்கி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள.

பாண்டிருப்பில் காலமாகிய தையிட்டி கணேச வித்தியாசாலை முன்னாள் அதிபர் கயிலாயபிள்ளை அவர்களின் ஈமக்கிரியைகள் 02 - 01 - 1994 அன்று பாண்டிருப்பில் நடைபெற்றன.

அன்னார் காலஞ்சென்ற அமராவதியின் அன்புக் கணவரும், மலேசியாவில் காலஞ்சென்ற தில்லைநாயகம், அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பெரிய நீலாவணை டாக்டர் பாலசிங்கம், இராசமணி (கல்கிசை) ஆகியோரின் அன்புத் தந்தையும், எக்ஸ்ரே வல்லுனர் கனகசபை (ஓமான்), இந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், கோசலை, மதியழகன், கேதீஸ்வரன், கேதாரகௌரி, தமிழ்வாணி, சரவணன், யாழ்நங்கை, பிரணவன், கோகுலக்கண்ணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

தகவல்:
பே. தி. கனகசபை

[29164]

ஆலயங்களில்

பாண்டியன்தாழ்வு ஸ்ரீநரசிம்ம ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

உற்சவ நாட்களில் தினமும் மாலை 5 மணி தொடக்கம் மகாபாரதம் தொடர் சொற்பொழிவை சி. வை நித்தியானந்தசர்மா நிகழ்த்துவார்.

★ ★ ★

கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கோவிலின் வருடாந்தக் குளிர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (த-30)

★ ★ ★

யாழ். இந்துக் கல்லூரி மைதான சந்தி அருகில் அமைந்துள்ள மெய்கண்ட தேவர் ஆதீன செயலகத்தில் இன்று காலை 9 மணி முதல் சண்டேசுரநாயனார் குருபூசை இடம்பெறும். (த)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-02-28 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**தற்காலிக
போதனாசிரியர்
(கணனிப்பகுதி)**

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக போதனாசிரியர் (கணனிப் பகுதி) — ரூபா 4,420/- (நிலையானது மாதமொன்றிற்கு)

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 4,100/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

தகைமைகள்:

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 1 ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளை உடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

– பதிவாளர்

யாழ்ப்பாணப் –
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-01-26

[சி-7149]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L

SAT., SUN CLASSES
(காலை 8 மணி முதல்
மாலை 3-00 மணி)
EVENING CLASSES
(மாலை 3-15 மணி முதல்
மாலை 6-00 மணி)
DAY CLASSES
(காலை 8-15 மணி முதல்
பிற்பகல் 2 00 மணி)

★ திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

[சி-7158]

UNIVERSITY OF JAFFNA

TENDER FOR THE SUPPLY OF FURNITURE

Sealed Tenders are invited for the following.

01.	Glass Fronted Almirah	— 17 nos
02	Office Table	— 05 nos
03	Glass Fronted Key Board with Lock	— 02 nos
04.	Full Book Shelves	— 15 nos
05.	Conference Table	— 01 no
06.	Conference Table Chair	— 12 nos
07.	Wooden Almirah	— 01 no
08.	Laboratory Table 8'x2'9''x2'6''	— 04 nos
09.	Laboratory Table 6'3''x2'9''x2'6''	— 02 nos
10.	Timber Screens 8'x2½'x2'	— 02 nos
11.	Timber Screens 9'x2½'x2'	— 02 nos
12.	Timber Screen 7'	— 01 no
13.	Timber Screen 6'	— 01 no
14.	Arm Chair	— 17 nos
15.	Typist Chair	— 01 no
16	Laboratory Stool	— 40 nos
17.	Executive Table Type I	— 05 nos
18	St. Back Chairs	— 16 nos
19.	Notice Board 5'x4'	— 01 no
20	Small Table 2½'	— 01 no

Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna between 01 02-1994 to 11-02-1994 during office hours, on payment of Rs 250/- as non-refundable deposit and Rs. 5,000/- as refundable deposit.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 15-02-1994 at 10-00a m. indicating 'Tenders for the Supply of Furniture' on the left hand corner of the envelope. The tenders will be opened on the same day at 10-30a.m.

— REGISTRAR.

University of Jaffna

[C-7148]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி வள்ளியம்மை கந்தையா

(இணுவில் மேற்கு)

தோற்றம்:- 20 – 08 – 1921
நிறைவு:- 01 – 01 – 1994

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் எல்லோராலும் அம்மா என்று அழைக்கப்பெற்று நன்மதிப்புடன் வாழ்ந்த எங்கள் தெய்வமே! உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும். உங்கள் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறும் இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

(29192)

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் டாம்பீகம்

தமிழீழ மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகள், இராணுவ அட்டூழியங்களால் தமிழ் மக்களின் உயிர் உடைமைப் பாதுகாப்பு நிச்சயமற்றதாகி உள்ளது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்த நிலை தொடர்வதால் ஈழத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளுக்கு அகதிகளாகத் தஞ்சம் கோரிச் செல்ல நேர்ந்தது.

இவ்வாறு சென்றவர்களை திருப்பி அனுப்ப வெளிநாடுகள் முனைந்திருக்கும் இவ்வேளையில் அங்கே சென்று தற்காலிக வாசம் செய்வதற்கு அனுமதி கிடைத்தவர்களும், அகதிகளாகவே வாழ்வோரும், அந்நாடுகளில் அடிக்கும் கொட்டமும், கும்மாளமும், கேட்பதற்கு கவலை தருவனவாக உள்ளன.

தாம் யார், தாம் எங்கே இருக்கிறார்கள், தமது நிலை என்ன, தாம் எவ்வாறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பனவற்றை எல்லாம் மறந்து பண்பு கெட்ட வகையில், மதிமழுங்கிச் செயற்படுகிறார்கள்; வாழ்கிறார்கள்.

அவர்கள் தங்கள் தாய் மண்ணை விட்டு, நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போன பக்கிரிகள் என்பதனை மட்டும் மறக்கவில்லை. தங்களை ஈன்ற இந்த மண்ணின் அவலங்களை, இங்கு வாழும் தமது சகோதரர்கள் படும் துன்பங்களை, இன்னல்களைச் சிறிதும் உணராதவர்களாகவும் வாழ்கிறார்களே என்பது மேலும் வேதனைக்கு உரியதாகும்.

தாம் அகதிகளாகப் புகலிடம் தேடிச் சென்றவர்கள் என்பதனையும் மறந்து அங்கெல்லாம் கைகலப்புகள் வன்செயல்களில் ஈடுபடுகிறார்கள். ஈழத் தமிழ் இனத்தின் மதிப்பையும் மரியாதையையும் கெடுத்து அபகீர்த்தி உண்டாக்கும் கூட்டத்தினர் குறித்து முன்னர் தகவல்கள் கிடைத்தன.

இப்போது —

அங்கு ''தொட்டாட்டி'' வேலை செய்து உழைக்கும் பணத்தை எப்படித் தக்கவாறு செலவு செய்வது என்பது தெரியாமல், புரியாமல் டாம்பீகம் பண்ணுவது குறித்து செய்தி வந்திருக்கிறது.

தமது பிள்ளையின் பிறந்த நாள் ''கேக்''கை வெட்டுவதற்கு, பிரான்ஸில் வாழும் ஈழத் தமிழர் ஒருவர், இருபது பவுணில் தங்கக் கத்தி ஒன்று செய்து கொடுத்தாராம்!

அவர் தாம் உழைத்த பணத்தில் தமது அருமைப் பிள்ளைக்கு பிறந்த தினம் கொண்டாடுவது அவருக்கு உள்ள உரிமை. ஆனால் அவர் தன்னை மறந்து, தனது தாய் மண்ணை மறந்து, இங்குள்ள இரத்தத்தின் இரத்தங்களை மறந்த இந்தளவு டாம்பீகம் புரிய வேண்டுமா? அந்தப் பணத்தை இங்குள்ள ஒரு தொண்டர் நிறுவனத்துக்கு அனுப்பியிருக்கக்கூடாதா?

தனது தாய் பசித்திருக்க காசியில் போய் தானம் செய்யும் மனப்போக்கு இங்கிருந்து சென்ற ஈழத்தமிழ் அகதிகளிடம் வளர்ந்துவிட்டது என்பதற்கு இது ஓர் எடுத்தக்காட்டாகும்

''கேக்'' வெட்டுவதற்கு இருபது தங்கப் பவுணில் கத்தி செய்தவர் தனது தாய் மண்ணில் எத்தனை பிஞ்சுகள் ஸ்ரீலங்கா அரசின் நிட்டூரத்தால் தாய் தந்தையரை இழந்து ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியின்றியும், போசாக்கின்றியும், நோய்க்கு மருந்தின்றியும் இறந்தொழிகிறார்கள் என்பதனை உணராமல் போனது ஏனோ?

இவரைப்போல இன்னும் ஆயிரமாயிரம் பேர் தங்கள் மண்ணைப்பற்றியும், மக்களைப் பற்றியுமான இன-சமூக உணர்வில்லாதவர்களாக வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். இவர்கள் பிறந்த தாய் மண்ணை மறந்த போக்கிரிகள் என்றே வருக்க வேண்டும்.

இப்பேர்ப்பட்டவர்களை அந்த நாடுகள் பிடித்திழுத்துத் தள்ளி, இங்கே திருப்பி அனுப்பினால்தான் அவர்களுக்குப் புத்தி வரும். புத்தி பேதலித்தவர்களை வேறு என்ன செய்ய முடியும்?

இலங்கைக்கு உதவி வழங்க நாணய நிதியம் நிபந்தனை

யாழ்ப்பாணம், ஜன. 31

ஸ்ரீலங்கா அரசு தனது செலவுகளை கடுமையாகக் குறைக்க வேண்டும். இல்லாவிடில் வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்படும் பற்றாக் குறைக்கான மேலதிக நிதியை வழங்க முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, சர்வதேச நாணய நிதியத்தின் குழு ஒன்று ஸ்ரீலங்கா வந்துள்ளது.

இக்குழு கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகர சபைக்கும் நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் பற்றியும், இவ்வாண்டு நடுப்பகுதியில் பொதுத்தேர்தலை நடத்துவது பற்றியும் விசாரணை செய்வதற்கு வந்துள்ளதாகவும் —

அந்த விசாரணைகளின் பின்னரே ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி உதவி செய்வது தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் முடிவெடுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

8 வது உலக தமிழ் மாநாடு அடுத்த ஆண்டு தஞ்சாவூரில்

சென்னை, ஜன. 31

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு, தமிழக அரசின் ஆதரவில் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது.

தமிழக அரசு இது பற்றிய தகவலை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருக்கிறது.

மாநாட்டை நடத்துவதற்காக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையில் வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இதனைவிட 16 உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழ் மாநாடு தமிழ் நாட்டில் சென்னையில் 1968 லும் மதுரையில் 1981 இலும் நடத்தப்பட்டன. (த-எ)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 31

''காலங்கள்'' எனும் சாந்தனின் கதைத் தொகுதியின் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் விழாவில் திரு டானியல் அன்ரனி வெளியீட்டுரையையும் கவிஞர் சோ. பத்மநாதன், செல்வி ப. நாமகள், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் மதிப்புரைகளையும் நிகழ்த்துவார்கள். (க)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

விசேட திட்டத்தின் கீழ் 7 கிராமங்கள் அபிவிருத்தி

இவ்வருடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் விசேட கிராம மேம்பாட்டுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. இதன் கீழ் பின் தங்கிய நிலையில் உள்ள 7 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இதற்கென யாழ். மாவட்டத்தில் 3 கிராமங்களும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு கிராமமும் தெரிவு செய்யப்பட உள்ளன.

வீடு கட்டிக் கொடுத்தல், அறிவாலயங்கள், பாலர் பாடசாலைகள் அமைத்துக் கொடுத்தல் போன்ற வேலைகள் இத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒரு கிராமத்தில் 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆகக் குறைந்தது 1 லட்சம் ரூபா வரை கிராம அபிவிருத்திக்கு செலவிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-162)

இராணுவச் சோதனை கிழக்கில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 31

எதிர்வரும் மார்ச் மாதம் கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற உள்ளதை தொடர்ந்து இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை முதல் கல்முனை வரையிலான பிரதான வீதியில் சோதனை நிலையங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள 'முகமூடி'களின் தலையசைப்பைத் தொடர்ந்து பலரை படையினர் கைது செய்வதாகவும் —

இதனைவிட சந்தேகத்தின் பேரிலும் பல தமிழர்களைப் படையினர் கைது செய்து வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் துருவி துருவி சோதனையிடப்படுகின்றனர். வாகனங்கள் நுணுக்கமாகச் சோதனை இடப்பட்டு வருகின்றன.

இதனால் மக்கள் சுதந்திரமாகப் போக்குவரத்து செய்ய முடியவில்லை என்று முறையிடப்படுகின்றது. (த-எ)

தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழீழத்தில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அவற்றுக்கான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வரும் ஒழுங்குகள் கைக்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ காசேடு, விற்பனை நாளேடு கொள்வனவுநாளேடு பேரேடு ஆகிய முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட வேண்டும்.

★ அனைத்து விற்பனவுகளுக்கும் விற்பனவுச் சிட்டைகள் வழங்கப்பட வேண்டும்.

★ செயல் முறைக்காகப் பெற்றுக் கொள்ளும் அனைத்துச் சேவை வரவிற்கும் வர

(4 ஆம் பக்கம் பார்க்க)

எம். பிக்களுக்கு ஓய்வூதியம்; கால எல்லை குறைப்பு?

காமினி இணைந்ததன் விளைவு

கொழும்பு, ஜன 31

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு பணிபுரிய வேண்டிய கால எல்லையை ஐந்து ஆண்டுகளில் இருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைப்பது பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து நாடாளுமன்றத்தில் தேர்தல் சட்டத் திருத்தம் ஒன்று கொண்டு வரப்படவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவும் அவரது ஆதரவாளர்களும் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்ததைத் தொடர்ந்து அவர்களில் சிலருக்கு நாடாளுமன்றத்தில் இடமளிக்க வேண்டிய நிலை விஜேதுங்க அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகவும்—

அதற்காக ஓய்வூதியம் பெறச் சேவையாற்ற வேண்டிய கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் ஐ.தே.க தேசிய பட்டியலைச் சேர்ந்த சில எம்.பிக்கள் பதவி விலகலாம் என்றும் —

அப்படி பதவி விலகுபவர்கள் ஓய்வூதியம் இன்றி போவதைத் தவிர்ப்பதற்கே இச்சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதாகவும் கொழும்பு பத்திரிகைகள் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியிட்டுள்ளன.

இலக்கியப் போட்டிக்கு நூல்களை அனுப்பலாம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் 1994 ஆம் ஆண்டுக்கான இலக்கியப் பரிசுக்கான போட்டிக்கு நூல்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நாவல், சிறுகதை, கவிதை (மரபு, புதுக்கவிதை) நாடகம் சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்வு இலக்கியம் (வரலாறு, அரசியல்) ஆகிய துறைகளில் அச்சில் வெளியான நூல்களில் 3 பிரதிகள் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நூல்களை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக ''செயலாளர், கல்வி கலாசார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாண சபை, திருமலை'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்

1993 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளியான நூல்களே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும் (த-5)

வட-கிழக்குக்கு அனுப்ப முடியாததால்

தென்பகுதியில் ஓடு உற்பத்தி நெருக்கடி நிலையில்

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு ஓடுகளை அனுப்ப முடியாமல் இருப்பதால் தென் பகுதியில் ஓடு உற்பத்தியில் ஈடுபடும் தொழிற்சாலைகள் நெருக்கடி நிலையை எதிர் நோக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு வாய்க்காலில் இடம்பெறும் ஓடு உற்பத்தியில் தேவைக்கு அதிகமாக ஓடுகள் உற்பத்தி செய்யப்படுவதால் நெருக்கடி நிலை எழுந்துள்ளது. இப்பகுதியிலேயே அதிகளவில் ஓடு உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

50 தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன. உற்பத்தியை மேற்கொண்டு வரும் சில தொழிற்சாலைகளும் தங்களின் தயாரிப்பை அரைப்பங்காகக் குறைத்துள்ளன. (த-162)

யாழ். ஆஸ்பத்திரி "எக்ஸ்றே" கருவி செயலிழந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். போதனா வைத்திய சாலையின் எக்ஸ்றே பிரிவில் இயங்கி வந்த எக்ஸ்றே கருவி கடந்த சனிக்கிழமை பழுதடைந்ததை அடுத்து எக்ஸ்றே எடுப்பதில் பெரும் சிரமம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரிவில் ஆரம்பத்தில் நான்கு பாரிய எக்ஸ்றே கருவிகள் இயங்கி வந்தன. பின்னர் அதில் 3 கருவிகள் திருத்த முடியாத அளவிற்கு பழுதடைந்து விட்டன. அதனைத் தொடர்ந்து ஒரு பாரிய கருவி மட்டும் இயங்கி வந்த நிலையில் கடந்த வருடம் சிறிய மொபைல் எக்ஸ்றே கருவி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது அந்த ஒரு பாரிய எக்ஸ்றே கருவியும் பழுதடைந்து விட்டதால் மொபைல் கருவியால் சிறுபிள்ளைகளுக்கான எக்ஸ்றே மாத்திரமே எடுக்கப்படுகின்றது.

வயது வந்தவர்களுக்கு எக்ஸ்றே எடுக்க முடியாத நிலை நிலவுகின்றது.

பழுதடைந்த கருவியைத் திருத்துவதில் உள்ளூர் இயந்திரவியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-15)

சிங்கள பேரினவாத அமைப்புகள் ஐ.தே.கவை எதிர்த்துபோர்க்கொடி

கொழும்பு, ஜன. 31

தீவிர சிங்கள பேரினவாதப் போக்கை கொண்டுள்ள அமைப்புக்கள் சில ஐ.தே.கவுக்கு எதிராகப் போராடுவதென முடிவு செய்துள்ளன.

கடந்த வாரம் பாணந்துறையில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்ட பேரினவாத போக்கைக் கொண்டுள்ள அமைப்புக்கள் இது தொடர்பான முடிவை எடுத்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

தென் மாகாண சபைத் தேர்தலில் மாத்ரு பூமி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேரினவாத அமைப்பு போட்டியிடுகிறது என்றும்—

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கொழும்பு வந்த பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கிய கடற்படைச் சிப்பாய் விஜயமுனியே இந்த அமைப்புக்கு தலைமை தாங்குவதாகவும்— அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரினவாத அமைப்புகளின் தோற்றம் பேரினவாத நெருக்குதலுக்கு உள்ளாக வேண்டிய நெருக்குதலை அரசுக்கு மேலும் கொடுப்பதாகவே இருக்கும் என்றும் அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது [த-3]

பெப்ரவரி நடுப்பகுதியில் 'ருகுணு' வரும்

யாழ்ப்பாணம், ஜன 31

கொழும்பில் தற்சமயம் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருக்கும் ''றுகுணு'' கப்பல் அடுத்தமாத நடுப்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்துக்கான பலசரப்பட்ட பொருள்கள் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

யாழ். அரச அதிபரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக் கப்பல் தொடர்ந்து பொருள்கள் ஏற்றிவரும் பணியில் ஈடுபடும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

(த-3)

டிசம்பர் மாத ஒளிவீச்சு வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஜன. 31

நிதர்சனம் நிறுவனம் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஒளிவீச்சு' வீடியோ சஞ்சிகையின் டிசம்பர் மாத நாடா வெளிவந்துள்ளது.

யுத்தமுனையில் சாதனைகள் படைத்த போராளிகளை தலைவர் பரிசில் வழங்கி கௌரவித்தமை, வான்படையின் குண்டு வீச்சுப் படுகொலைகள், வெள்ள அனர்த்தங்கள், நத்தார் கொண்டாட்டங்கள், பூநகரி வெற்றி நாள் கொண்டாட்டங்கள் ஆகியவை சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளன. (த)

ஹமில்டன் குழு திருமலை பயணம்

கொழும்பு, ஜன 31

உள்ளூராட்சித் தேர்தலையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆராய பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா, பொலிஸ்மா அதிபர் பிராங்க் டி சில்வா ஆகியோர் அடங்கிய குழு ஒன்று சமீபத்தில் திருகோணமலைக்குச் சென்றது.

(த-எ)

அன்பளிப்பு

யாழ். வட்ட லியோ கழகத்தினர் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு 11 ஆயிரம் ரூபா பெறுமதியான தைக்கப்பட்ட ஆடைகள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை அண்மையில் அன்பளிப்பாக வழங்கினர்.

சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி ஒன்றும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (த)

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி அரசியல் லாபம்தேடவில்லை

அமைச்சர் சிறிசேன குரே தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு பிரச்சினையில் அரசியல் லாபத்தை ஈட்ட சில அரசியல் கட்சிகள் முயற்சிக்கின்றன. எனினும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பொது மக்களின் நலன் கருதி அன்று கொண்டிருந்த நிலைப்பாட்டை இன்றும் காப்பாற்றி வருகின்றது

அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு. சிறிசேன குரே முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் 10 ஆவது ஆண்டு மாநாட்டில் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏழை எளியவர்களின் தேவைகளை நிறைவேற்றிய பிரேமதாஸாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பூரண ஆதரவளிக்கும் என, அக்கட்சியின் தலைவர் ஓஸி அபேகுணசேகரா தெரிவித்தார்.

(த-எ-6)

ஏழைமக்களின் அன்பன் புனித ஜோண் பொஸ்கோ

ஜனவரி 31 ஆம் திகதியாகிய இன்று புனித ஜோண் பொஸ்கோ இறைபதம் அடைந்த நாளாகும்.

இவர் இத்தாலியிலுள்ள பெஸ்கி என்னும் கிராமத்தில் பிரான்சிஸ் பொஸ்கோவிற்கும் மார்க்கரீத் ஒக்கியோனாவுக்கும் இரண்டாவது புதல்வனாக 1815 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் திகதி பிறந்தார் இரண்டு வயதிலேயே தந்தையை இழந்தார். இவருடைய தாயார் எழுத்து வாசிப்பு அறியாதவர். ஆனால் தெய்வ ஞானம் நிறைந்த உத்தமி.

தாயாரின்போதனையாலும் வழிகாட்டுதலாலும் புனித பொஸ்கோ சிறுவயதிலேயே இறைஅன்பு நல்லொழுக்கம், கீழ்ப்படிவு, நேர்மை, இரக்கம், ஈகை, உதாரகுணம் முதலிய நற்பண்புகள் நிறையப் பெற்றவராக விளங்கினார் ஏழைகளின் அன்பனாகவும், குறும்புக்காரரின் தோழனாகவும் திகழ்ந்தார்

இவர் தமது ஒன்பதாவது வயதில அருட்தந்தை கலோசோ அவர்களின் உதவியோடு மூன்று மைல் தூரத்திலுள்ள பாடசாலைக்கு நடந்து சென்று கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார். இச்சிறுவன் வாரத்தில் இருநாட்கள் பாடசாலை சென்று கல்வி கற்பார். ஏனைய நாட்களில் வயலில் வேலை செய்வார்.

சிறுவன் பொஸ்கோ கற்பதில் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். இவரது அபூர்வ ஞாபகசக்தி அவரது உடன் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அவர்பால் ஈர்த்தது இச்சிறுவன் தெருவில் குறும்புத்தனம் புரிபவர்களைக் கண்டால் வேடிக்கை விளையாட்டுகள் மூலம் அவர்களைத் தன்பால் இழுத்து அவர்களுக்குப் புத்திமதிகள் புகட்டி நல்வழிப்படுத்துவார். இன்னும் ஏழைச் சிறுவர்களைத் தேடிச்சென்று தான் கற்றவற்றை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார். நன்றாகப் பாடும் வல்லமையும் பெற்றிருந்தார். தனதுபாடும் வல்லமையைக் கொண்டு பெரியவர்களையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டார்.

புனித பொஸ்கோ ஒரு சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். வளர்ந்தும் அறிவுத்திறனும் நற் பழக்க வழக்கங்களும் இன்றி இருந்தவர்களைப் பயிற்றுங்கால் அவர்களைத் தனித் தனியே கண்காணித்து அவர்களின் குறைகளுக்கு ஏற்ற வகையில் கல்வி புகட்டி விளையாட்டின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்தி கற்பித்து கல்வியில் சிறந்து விளங்கச் செய்தார்.

இவர் தமது இளம் வயதில் புனித சலேசியார் குருமடத்தில் சேர்ந்தார் 20 ஆம் வயதில் ஒரு குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். திருநிலைப் படுத்தப்பட்ட பின் பல அனாதை இல்லங்களை அமைத்தார். அதில் அனாதைச் சிறுவர்களையும் குறும்பு செய்யும் சிறுவர்களையும் சேர்த்துக் கொண்டார் தந்தைக்குரிய அன்போடு வழிகாட்டி அவர்களுக்கு எல்லாமாக விளங்கினார் இதனால் இவர் அனாதைகளின் தந்தை பொஸ்கோ என அழைக்கப்பட்டார்.

சிறு வயதிலிருந்தே மரியன்னையில் அன்புடையவராகத் திகழ்ந்தார். அவர் தமது [illegible] காலத்தில் மரியன்னையின் பெயரால் தேவாலயத்தைக் கட்டி அபிஷேகம் செய்வித்தார். இவர் பல முறை நோய் வாய்ப்பட்டபோதும் அற்புதமான முறையில் சுகம்பெற்று சேவையாற்றி வந்தார். ஈற்றில் 1888 ஆம் வருடம் தை மாதம் 31ஆம் திகதி தமது 73ஆவது வயதில் இறைபதம் சேர்ந்தார்.

- பேசுதாசன் -

வன்செயல்களால் பாதிப்பு; துரித மதிப்பீட்டுக்கு ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட துரித மதிப்பீட்டு முறை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை யாழ். அரசாங்க செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

மீன்பிடி, கால்நடைத் துறை போன்ற பொருத்தமான உற்பத்தித் தொழிலில் ஏற்பட்ட அசைவுடைய, அசைவற்ற சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு கிராம உத்தியோகத்தர்கள் மூலம் மதிப்பீட்டுப் படிவங்களை வழங்கி இந்த மதிப்பீட்டு முறை மேற்கொள்ளப்படவுள்ளன.

மீன்பிடித் தொழிலில் ஏற்பட்ட இழப்பு, நட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு ''ஆர். ஏ. எஸ். 2'' கால்நடையில் ஏற்பட்ட இழப்பு, நட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு ''ஆர். ஏ. எஸ். 3'' மீன்பிடி, கால்நடை வளர்ப்புக்கள் தவிர்ந்த மற்றைய துறைகளில் ஏற்பட்ட இழப்பு, நட்டம் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கு ''ஆர். ஏ. எஸ். 1'' ஆகிய மூன்று வகையான மதிப்பீட்டுப் படிவங்கள் யாழ். அரசாங்க செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் தயாரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் தனியாரது சொந்தப் பாவனைக்கானவதிவிடங்கள், தனிப்பட்ட பாவனை உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட அழிவுகள், தயாரிப்பு, உற்பத்தி வர்த்தகம் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளில் அடங்காத காரணத்தினால் அது தொடர்பான மதிப்பீடுகள் தேவையற்றவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [illegible]

மரண அறிவித்தல்கள்

கந்தையா செல்லையா

காரைநகர், பெரியமணலைச் சேர்ந்த கந்தையா செல்லையா 30-01-94 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் கந்தையா தம்பதிகளின் மகனும், வேலுப்பிள்ளை [காரைநகர் M. P. C. S.] நல்லம்மா, நேசரத்தினம், கமலாம்பிகை, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பதேவி, நாகலிங்கம், தேவராசா, பத்மநாதன், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியானந்தன், தவராசா, தேவகுமாரி, கலைச்செல்வி, விமலச்சந்திரன், மகாலட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 30-01-94 கம்பனை வீதி, சுழிபுரத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. வேலுப்பிள்ளை
[மகன்]

கம்பனை வீதி,
பறாளாய், சுழிபுரம்.
[29184]

அப்பையா செல்லம்மா

பெரியவிளானை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இடம் பெயர்ந்து சங்கானை காளி கோவிலடியில் வசித்தவருமாகிய காலஞ் சென்ற பிரபல ஆசாரி கதிரேசு அப்பையாவின் மனைவி செல்லம்மா காலமானார்.

அன்னார் சபாரட்ணத்தின் (காங்கேசன் துறைசிமெந்துக் கூட்டுத்தாபனம்) அன்புத் தாயாரும் அன்னலட்சுமியின் மாமியாரும் திருமதி ஞானயோகலிங்கம் கோகிலராணி, கலாராணி, மகேந்திரராசா (மொஸ்கோ), அருந்தவராசா, வரதராசா (C.E), (M.E) (தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்), தவராணி ஆகியோரின் பேர்த்தியும் நிபன், திவாகர், சஞ்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சபாரட்ணம்
(மகன்)
(29191)

சங்கானை.

குஞ்சுத்தம்பி கனகசுந்தரம்

குஞ்சுத்தம்பி கனகசுந்தரம் 30-01-1994 மாலை 4.30 மணியளவில் காலமானார்.

அன்னார் அருட்செல்வம் (சென்: ஜோன்ஸ் கல்லூரி), செல்வேந்திரதாஸ் (ஓமான்), தவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினவதனா (சென். ஜோன்ஸ் கல்லூரி), சோதிலாமணி, குலதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயரூபினி, ஜெயனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (31-01-1994) காலை 10 மணிக்கு கட்டைவேலி, கரவெட்டியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. யோகரத்தினம்

கட்டைவேலி,
கரவெட்டி.
(29193)

கிருஷ்ணர் செல்லம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், ''பூம்புகார்'' இல. 5A, 2 ஆம் ஒழுங்கை, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா நேற்று (30-1-94) இயற்கை எய்தினார்.

அன்னார் கிருஷ்ணரின் அன்பு மனைவியும், வடிவேல் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா), ஞானேந்திரா [துரை] (முன்னாள் விரிவுரையாளர், தொ. நு. கல்லூரி, யாழ்ப்பாணம், தற்போது கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாவதி, பேபிசறோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சன் (சுவிஸ்), ரூபசேயோன், விபூஜிதா, நிறோஜா, நிர்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 31-1-94 பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

தகவல்:
வடிவேல்
(மகன்)

'பூம்புகார்',
இல. 5 A, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(29194)

JOHANNA ALAGAMMAH RICHRADS
அழகு றிச்சேட்ஸ்

[ஓய்வுபெற்ற ஆசிரியை]

திருமதி அழகு றிச்சேட்ஸ் அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற ஹரி றிச்சேட்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு திருமதி W A. வால்றன் தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற அரசு வால்றன், காலஞ்சென்ற அமிர்தம் நைல்ஸ், திருமதி சுகிர்தம் நாதனியேல்ஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை வால்ரன் பிளேஸ், தும்பளை பருத்தித்துறையில் உள்ள அவரது ''நேசகம்'' இல்லத்தில் இன்று [31-01-94] திங்கள் பி. ப. 3 மணிக்கு நடைபெறும்

தகவல்:
Ben Gunaratnam

[29188]

செப்ரிசிமியா: மற்றொரு மரணம்

செப்ரிசிமியா நோயினால் பீடிக்கப்பட்டதாகக் கருதப்படும் 2 வயதுப் பெண் குழந்தை ஒன்று நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானது.

வேலணையில் இருந்து இடப்பெயர்ந்து கொட்டடியில் வசித்து வந்த கே. தர்சிகா (வயது 2) என்ற பெண் குழந்தையே நேற்று மரணமானது (உ-15)

விளையாட்டு நிகழ்வு

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்திவரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று 'கரம்' போட்டி இடம் பெறும். யாழ். பல்கலைக்கழக புதிய கட்டடத் தொகுதியில் பிற்பகல் 3 மணி முதல் 5 30 மணி வரை இந்த ஆட்டம் நடைபெறும்.

தொழில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுச் சிட்டை வழங்கப்பட வேண்டும்.

★ சிட்டைகளில் தங்கள் வாணிபம் மற்றும் தொழிலின் பெயரும் பதிவு இலக்கமும் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

★ ''ஒன் அப்புரூவல்'' (ON APPROVAL) என்னும் சிட்டையைப் பயன்படுத்துவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

★ அனைத்துக் கொள்வனவுகளையும் உறுதி செய்யும் வகையில் உரிய சிட்டைகள் முறையாகப் பேணப்பட வேண்டும்.

மேற்குறித்த ஒழுங்கு முறைகளைக் கவனத்தில் கொள்ளாதவர்களின் வாணிபம், தொழிற் பதிவுகள் நீக்கப்பட நேரிடும் என்பதை கவனத்திற் கொள்ளவும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவருடன் கைது செய்யப்பட்ட — கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவியான — ஞானராணி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட போது தலைமறைவாகி வெளிநாடு சென்று விட்டதாகவும் கூறப்பட்டது.

இருதயநாதன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் சந்தேக நபருக்கு எதிராக உள்ள — ஒரேயொரு சாட்சியமான — குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் அவரது சுயவிருப்பத்தின் பேரின் பெற்றுக்கொள்ளப்படவில்லை என வாதாடினார்.

அதனை ஏற்று சந்தேக நபரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ-3)

தென்னிந்தியாவின்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே தொடர்பு இறுகி வருவதாக வெளியான அறிக்கைகளை தொடர்ந்தும் -

ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து வருவதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்தும் —

இந்த எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

எப்படியாயினும் —

இந்த விடயத்தை பாகிஸ்தானுடன் எந்த மட்டத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் எடுத்திருப்பதாகத் தெரியவரவில்லை என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

நாடாளுமன்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள சில மாவட்டங்களையும் உள்ளடக்கிய — தமிழர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஒருங்கிணைந்த — சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான யோசனை விடுதலைப் புலிகளுடன் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சிலரால் தெரிவுக் குழு முன் வைக்கப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

வெளியுறவுக் கொள்கை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க —

மொழி, காணி, கல்வி போன்ற விடயங்களுடன் பொலீஸ் படையும் முற்றாக மாநிலத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனினும் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை குறித்து இந்த யோசனையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தெரிவுக்குழு இந்த யோசனையை ஏற்று அதனை சிபாரிசு செய்தால் —

அதனை நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அங்கீகரிப்பதோடு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அப்படி ஏற்றால் மட்டுமே இந்த யோசனை செயலுருப் பெறும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்துடன் தெரிவுக்குழுவின் நடவடிக்கை முடியும் பட்சத்தில், டிசம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக சர்வசன வாக்கெடுப்பு நடைபெறலாம் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது,

பாலைவனத்தை சோலைவனமாக்கும்
பசுமை நிறைந்த மரம் நடுவோம்

இசைவகுப்புக்கள் பற்றிய
விசேட அறிவித்தல்

தெல்லிநகர் – பாலர் ஞானோதய சபையினரால் **27-01-1994** தைப்பூசத்திலன்று ''வாழ்வகம்'' மல்வம், உடுவிலில் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய இசைவகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தகுந்த ஆசிரியர்கள் இசைக்கல்வி பயிற்றுவிக்கின்றனர். **10-02-1994** வரை புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். விவரங்களை மேற்குறித்த விலாசத்தில் அறிந்து கொள்ளலாம்.

மேற்படி
சபை நிர்வாகத்தினர்
30-01-1994

''வாழ்வகம்'',
மல்வம்,
உடுவில்.
(6788)

நன்றி நவில்கிறோம்

எமது அன்புத்தாயார் திருமதி கெலன் செல்லம்மா சீமாம்பிள்ளையின் மரணத்தையொட்டி நடந்த வைபவங்களில் பலவிதத்திலும் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்த ஆயர்கள், குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை எனது சார்பிலும் எனது சகோதர, சகோதரிகள் சார்பிலும் தெரிவிக்கின்றேன்.

அருட்திரு. சீ. யோ. இம்மானுவேல்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(29189)

இன்று

புங்குடுதீவு கொத்தணி மற்றும் புங்குடுதீவு ம.வி. ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச்சென்ற திரு. க. பேரம்பலத்தின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சியை புங்குடுதீவு ம.வி. ஆசிரியர் நலன்புரி சங்கம் இன்று காலை 10 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

★ ★ ★

யாழ். நகர கிராம சேவையாளர் பிரிவில் வறிய குடும்பங்களின் நன்மை கருதி அமையவிருக்கும் தையல் பயிற்சி நிலையம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையில் திறந்து வைக்கப்படும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 31

வடமராட்சி கணித மூலவள நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள — ஜி.சி.ஈ சாதாரணதர கணித பாடத்தில் சித்தி அடையாத மாணவர்களுக்கான — விசேட செயலமர்வு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிமுலல் ஆரம்பமாகரிள்ளது

ஜி.சீ ஈ. சாதாரணதரப் பரீட்சை, தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு ஆகியவற்றில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் இந்தச் செயலமர்வில் சேர்த்துக் கொள்ளப்படுவர். (உ-5)

புதுடில்லியில் குண்டு வெடிப்பு

புதுடில்லி, ஜன. 31

புதுடில்லி நகரின் மத்திய பகுதியில் உள்ள ஓடியன் படமாளிகையில் நேற்று மாலை 6. 30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் சுமார் 20 பேர் காயமடைந்தனர்.

டெஸ்ட்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டியிருந்த 431 விக்கெட்டுகள் என்ற சாதனையை கபில் எட்டிப் பிடித்தார்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகும் 3 ஆவது டெஸ்டில் மற்றொரு விக்கெட்டை வீழ்த்துவதன் மூலம் ஹட்லியின் சாதனையை கபில் முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

1978 முதல் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வரும் கபில் தேவ், இதுவரை 129 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார்.

டெஸ்ட் விளையாட்டில் 5 ஆயிரம் ஓட்டங்களை பெற்றதுடன் 400க்கு அதிக விக்கெட்டுக்களையும் வீழ்த்திய ஒரே வீரர் கபில் என்பதும்-

அவரது இச்சாதனையை முறியடிக்கக் கூடிய சமகால வீரர் எவரும் தற்போது உலக டெஸ்ட் அரங்கில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முடிவுற்ற இரண்டாவது டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸால் வென்றது. ஓட்ட விபரம் வருமாறு:-

★ இந்தியா:- 6 விக்கெட்டுக்களுக்கு 541 ஓட்டங்கள்.

★ இலங்கை-231ஓட்டங்கள் 215 ஓட்டங்கள். (உ-6)

ஒரு வருட.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வால் பெற முடியாதுள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே இறந்து விட்டதாகக் கருதப்படுவோரின் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு வருடத்துக்கு மேலாக காணாமற் போனவர்கள் இறந்து விட்டதாக நம்பப்படும் பட்சத்தில் தகுந்த விசாரணையின் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.

இதற்கான சட்டத்திருத்தங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

தென் பகுதியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன என தெரிவிக்கப்பட்டது.

தெற்கில் பல ஜே வி.பி. சந்தேக நபர்களும், ஜே.வி.பியுடன் தொடர்புடைய முன்னாள் படை வீரர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் ஜே வி. பி. நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும் அவர்களில் அடங்கியுள்ளனர்.

தேசிய பாதுகாப்புக்கு ஜே வி பி. மீண்டும் அச்சுறுத்தலாகி வருவதாக பாதுகாப்புப் படையினர் அரசின் மேல் மட்டத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர் — இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

நாடாளுமன்று கலைக்கப்பட்டதும்
சு.கவின் எம்.பிக்கள் 40 பேர் ஐ.தே.கவில் சேருவார்களாம்!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் சுமார் நாற்பது சுதந்திரக் கட்சி எம். பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரவுள்ளனர் என்றும் —

அது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் அவர்கள் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர் என்றும் —

மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யு பி பி. திஸநாயக்கா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேரவுள்ள இத்த எம். பிக்கள் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்காளகப் போட்டியிடுவார்கள் என்றும் அவர் நாவலப்பிட்டி, குருந்துவத்தையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய போது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பங்குபற்றினார். அமைச்சர் அனுரா பண்டார நாயக்காவும் அதில் கலந்து கொண்டார்.

ஆனால் அனுரா பண்டார நாயக்காவின் தீவிர ஆதரவாளர்களான — சுதந்திரக் கட்சியின் நான்கு எம். பிக்கள் — மட்டுமே ஐ. தே. கவில் சேர்வர் என்றும் —

தேர்தல் சமயத்தில் இவர்கள் ஐ.தே.கவின் தேர்தல் பிரசார மேடைகளில் தோன்றுவர் என்றும் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' நாளிதழ் குறிப்பிட்டுள்ளது

தேர்தல்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் மலையகத் தமிழரின் ஆதரவைப் பெற அவர் விரும்பவில்லைப் போலும்.

நீண்டகாலம் அமைச்சராக இருக்கும் எஸ். தொண்டமானின் பதவிக்கும் இதனால் ஆபத்து வரக்கூடும்.

டி பியின் பேச்சும் போக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமரசம் ஏற்படுத்துபவையாகத் தெரியவில்லை.

தனது மக்களின் — மலைநாட்டுச் சிங்களவரின் — வாக்குகளை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றியீட்டி விடலாம் என அவர் எண்ணுகிறார். —இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

(உ-எ-6)

இசையாராதனை

பாரதி கான சபாவின் ஏற்பாட்டில் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா இன்று பிற்பகல் 2 30 மணி முதல் யாழ்ப்பாணம், அரசடி வீதி, 126/1 இலக்கத்தில் உள்ள எஸ். சர்வேஸ்வரசர்மாவின் இல்லத்தில் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்

கீர்த்தனாஞ்சலி, திவ்விய நாம பஜனை ஆகியவற்றில் வளரும் கலைஞர்கள், வித்துவான்கள் பங்குபற்றுவர். (உ)

யாழ்ப்பாணம் பஸ் நிலையம்

ஞானவைரவர் தேவஸ்தானம்
அலங்கார உற்சவம் 10ஆம் நாள்

இன்று காலை **9** மணிக்கு எம்பெருமானுக்கு **108** சங்கு அபிஷேகம் இடம்பெறும் அரியாலையூர் சுப்பிரமணியம் குழுவினர் மங்கள வாத்தியம் இசைப்பர்.

மாலை **4.30** மணி முதல் இலங்கையின் பிரபல நாதஸ்வர வித்வான்களின் நாத வெள்ளத்துடன் விசேட பூஜைகள் நடைபெற்று, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள்

8.00 மணி:— அருளுரை

நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

8.30 மணி:— மங்கள இசை

நாதஸ்வர வித்வான்கள்	தவில் வித்வான்கள்
கே. எம். பஞ்சாபிகேசன்	கே. நித்தியானந்தன்
என் கே. பத்மநாதன்	ரி. உதயசங்கர்
கே ஆர். சுந்தரமூர்த்தி	பி முருகதாஸ்
எஸ். எஸ். சிதம்பரநாதன்	ஆர். எஸ் ரவீந்திரன்
வி கே கானமூர்த்தி	ஆர் எஸ் சுதாகரன்
வி. கே. பஞ்சமூர்த்தி	பி. கணேசன்
ஆர். கேதீஸ்வரன்	பி. சுந்தரலிங்கம்
பி. நாகேந்திரன்	எஸ். ராமதாஸ்

11.00 மணி:— மெல்லிசை

ஈழத்தின் பிரபல மெல்லிசைப் பாடகர்

ஜி.சாந்தன்

மற்றும்

பார்வதி சிவபாதம்

இணைந்து வழங்கும் இசை அமுதம்

குறிப்பு:-

வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் ஸ்தாபனங்களைத் திறந்து சுவாமி வீதியுலா வரும் போது பூரண கும்பம் வைத்து எம்பெருமானின் அருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

விசேட ஒளியமைப்பு:-
மனோ லைட் — கோப்பாய்

விசேட ஒலியமைப்பு:-
நித்தி சவுண்ட் — யாழ்ப்பாணம்,
கண்ணா—திருநெல்வேலி

— உபயகாரர்
(29190)

ENGLISH TEACHERS' SELECTION EXAMINATION - 1994

உதவி ஆங்கில ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை

துரித பயிற்சி நெறி

ஆரம்பம்; **02-02-1994** பி. ப. **2** மணி

ஆசிரியர்
க. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்கட்கு தொடர்பு கொள்ளவும்

SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
(C/7168)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினா[illegible] [illegible] அச்சகத்தில் 31-01-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.